| வினாத்தொகுப்பு எண் : |
|---|
| 10038917 |

# CTND003GS/24

பதிவு எண். | | | | | | | | | | |

**2024**

**தாள் – I**

## தமிழ் தகுதித்தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) மற்றும் பொது அறிவு – (பத்தாம் வகுப்புத் தரம்)

## இந்த வினாப்புத்தகம்

பகுதி–அ (தமிழ் தகுதித் தேர்வு பத்தாம் வகுப்புத் தரம்) மற்றும்
பகுதி-ஆ (பொது அறிவு – பத்தாம் வகுப்புத் தரம்) வினை உள்ளடக்கியது

**கால அளவு : மூன்று மணி நேரம்]** **[மொத்த மதிப்பெண்கள் : 300**

**வினாக்களுக்கு விடையளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 200 வினாக்களைக் கொண்டுள்ளது. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது.
3. விடைகளை குறிப்பதற்கு OMR விடைத்தாள் ஒன்று அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட, அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
4. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. இவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் குறிப்பதற்கு முன்பும் மற்றும் விடையளிக்கத் தொடங்கும் முன்பும், இவ்வினாத்தொகுப்பில் அனைத்து வினாக்களும் வரிசையாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாட்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினாத்தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், அவற்றுள் மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையினை அளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள "Space for Rough Work" பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.
9. வினா வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ), ஆங்கில வடிவே இறுதியானது.
10. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
11. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
12. **விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல் :**
    1) வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் அதற்குரிய இடத்தில் சரியாக எழுதி அதற்குரிய வட்டங்களை நிரப்ப வேண்டும். நீங்கள் எந்த வட்டங்களை நிரப்பியுள்ளீர்களோ அதுவே இறுதியானதாகும். வினாத்தொகுப்பு எண் சரியாக எழுதப்பட்டிருந்து, அதற்குரிய வட்டங்கள் நிரப்பாமல் விடப்பட்டிருந்தாலோ அல்லது கீழ்கண்டவாறு நிரப்பப்பட்டிருந்தாலோ விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
        - தவறாக நிரப்பப்பட்டிருந்தால்
        - முறையற்று நிரப்பப்பட்டிருந்தால்
        - ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால்
        - வழங்கப்பட்ட வினாத்தாள் வரிசையின் வரம்பிற்கு உட்படாத வினாத்தாள் வரிசை எண் நிரப்பப்பட்டிருந்தால்
        - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்
        - உங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தொகுப்பில் அச்சிடப்படாத வேறு எண்களை வினாத்தொகுப்பிற்கான வட்டங்களில் நிரப்பப்பட்டிருந்தால்
    2) கருமைநிற மை கொண்ட பந்துமுனைப் பேனா (Black Ink Ball Point Pen) தவிர வேறு பேனா உபயோகப்படுத்தி OMR விடைத்தாள் நிரப்பப்பட்டிருப்பின் அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
13. **மதிப்பெண்கள் குறைக்கப்படுதல் :**
    - வினாத்தொகுப்பு எண் எழுதுவதற்கு வழங்கப்பட்ட கட்டங்களில் வினாத்தொகுப்பு எண் எழுதப்படாமலோ அல்லது பகுதியளவு எழுதப்பட்டிருந்தாலோ விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்களிலிருந்து ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்.
14. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

**ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET**

SEAL

[Turn over

SPACE FOR ROUGH WORK

# பகுதி-அ - தமிழ் தகுதித்தேர்வு (பத்தாம் வகுப்புத்தரம்)

## Part-A - Tamil Eligibility Test (SSLC Standard)

**வினாக்கள் : 1–100** | **மொத்த மதிப்பெண்கள்: 150**

**Questions : 1–100** | **Total Marks : 150**

1. சரியான இணைப்புச் சொல்லைத் தேர்ந்தெடு :
   சுடர் விளக்கு ____________ தூண்டுகோல் வேண்டும்.
   (A) அதுபோல
   (B) ஆனாலும்
   (C) ஆகையால்
   (D) அதனால்
   (E) விடை தெரியவில்லை

2. இரு பொருள் தருக.
   தலை
   (A) முதன்மை, சிரம்
   (B) கயமை, சிரம்
   (C) வாய்மை, சிரம்
   (D) இறுதி, சிரம்
   (E) விடை தெரியவில்லை

3. இரு பொருள் தருக.
   நிறை
   (A) சால்பு, விடை
   (B) சார்பு, எடை
   (C) சால்பு, எடை
   (D) சார்பு, சால்பு
   (E) விடை தெரியவில்லை

4-8 கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.

தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன. இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

4. தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் நகரம் ___________.

(A) மதுரை

(B) திருநெல்வேலி

(C) பாளையங்கோட்டை

(D) கன்னியாகுமரி

(E) விடை தெரியவில்லை

5. தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள நகரம் எது?

(A) கோவில்பட்டி

(B) திருநெல்வேலி

(C) மதுரை

(D) பாளையங்கோட்டை

(E) விடை தெரியவில்லை

6. பாளையங்கோட்டை தாமிரபரணி ஆற்றின் __________ கரையில் அமைந்துள்ளது.

(A) கிழக்கு

(B) மேற்கு

(C) வடக்கு

(D) தெற்கு

(E) விடை தெரியவில்லை

7. பாளையங்கோட்டையில் அதிக அளவு இருப்பவை __________.

(A) கல்வி நிலையங்கள்

(B) அழகு நிலையங்கள்

(C) சுகாதார நிலையங்கள்

(D) தீயணைப்பு நிலையங்கள்

(E) விடை தெரியவில்லை

8. இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுபவை

(A) திருநெல்வேலியும் கன்னியாகுமரியும்

(B) திருநெல்வேலியும் தூத்துக்குடியும்

(C) திருநெல்வேலியும் பாளையங்கோட்டையும்

(D) திருநெல்வேலியும் மதுரையும்

(E) விடை தெரியவில்லை

9. சொல் பொருள் பொருத்துக.

(a) அழுவம், வங்கம் — 1. உரித்திரிசொல்

(b) இயம்பினான், பயின்றாள் — 2. இடைத்திரிசொல்

(c) அன்ன, மான — 3. வினைத்திரிசொல்

(d) கூர், கழி — 4. பெயர்த்திரிசொல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

10. சொல் பொருள் பொருத்துக.

(a) தீர்வன — 1. நல்லறிவு

(b) உவசமம் — 2. தன்மையுடையன

(c) ஓர்தல் — 3. நீங்குபவை

(d) திறத்தன — 4. அடங்கி இருத்தல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

11. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்

(B) சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்

(C) இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் காப்பியத்தை இயற்றியவர் என்னும்

(D) இயற்றியவர் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இளங்கோவடிகள்

(E) விடை தெரியவில்லை

12. சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) விளைநிலமாக இனிய சொல்லையே கொள்ள வேண்டும்

(B) கொள்ள வேண்டும் இனிய சொல்லையே விளைநிலமாக

(C) இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ள வேண்டும்

(D) இனிய சொல்லையே கொள்ள வேண்டும் விளைநிலமாக

(E) விடை தெரியவில்லை

13. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

(அ) பா — பாக்கள்

(ஆ) ஈ — ஈக்கள்

(இ) கா — காக்கள்

(ஈ) மடு — மடுக்கள்

(A) (அ), (ஈ)

(B) (அ), (ஆ)

(C) (ஆ), (இ)

(D) (இ), (ஈ)

(E) விடை தெரியவில்லை

14. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.

AUDITOR

(A) மேலாளர்
(B) அலுவலர்
(C) பட்டயக்கணக்கர்
(D) முதல்வர்
(E) விடை தெரியவில்லை

15. கூற்று, காரணம் சரியா? தவறா? கூறுக.

கூற்று : இந்தியாவில் காற்றாலை மின் உற்பத்தி செய்யப்படுகிறது.
காரணம் : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

(A) கூற்று சரி; காரணம் சரி
(B) கூற்று தவறு; காரணம் சரி
(C) கூற்று சரி; காரணம் தவறு
(D) கூற்று தவறு; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

16. கூற்று, காரணம் சரியா? தவறா? கூறுக.

கூற்று : ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.
காரணம் : 1988 ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் பெருவெடிப்பு, கருந்துளை ஆகியவை பற்றிய அரிய உண்மைகளைப் பொதுமக்களிடையே பரப்பி ஒரு கோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது.

(A) கூற்று சரி; காரணம் சரி
(B) கூற்று தவறு; காரணம் சரி
(C) கூற்று தவறு; காரணம் தவறு
(D) கூற்று சரி; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

17. பின்வருவனவற்றை சரியான வினை மரபோடு இணைத்து எழுதுக.

'முடை'

(A) பால் ————

(B) இலை ————

(C) மாலை ————

(D) கூடை ————

(E) விடை தெரியவில்லை

18. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்குக. (ஒலி மரபு)

அகவும்

(A) குயில் ————

(B) மயில் ————

(C) புறா ————

(D) கிளி ————

(E) விடை தெரியவில்லை

19. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ________ மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.

(A) மேலும்

(B) ஏனெனில்

(C) எனவே

(D) ஆதலால்

(E) விடை தெரியவில்லை

20. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

தமிழகத்தில் மழை பெய்து வருகிறது ———————— இரண்டு நாட்கள் மழை நீடிக்கும்.

(A) மேலும்
(B) எனவே
(C) ஆனால்
(D) இல்லையென்றால்
(E) விடை தெரியவில்லை

21. சொற்களை இணைத்து, புதிய சொல் உருவாக்குக.

மரம் + வேர்

(A) மரம் வேர்
(B) மரத்துவேர்
(C) மரவேர்
(D) மரத்தின்வேர்
(E) விடை தெரியவில்லை

22. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் உருவாக்குக.

நாட்டுபுறம் + பாடல்

(A) நாட்டுப்புறம்பாடல்
(B) நாட்டுபுற பாடல்
(C) நாட்டுப்புற பாடல்
(D) நாட்டுப்புறப்பாடல்
(E) விடை தெரியவில்லை

23. பேச்சு வழக்கு சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுக.

இன்னைக்குக் காத்தாலே காப்பி குடித்தேன்.

(A) இன்னைக்குக் காத்தாலே சுடுதண்ணீர் குடித்தேன்
(B) இன்றைக்கு காலையில் குளம்பிநீர் குடித்தேன்
(C) இன்னைக்கு காலையில் கஷாயம் குடித்தேன்
(D) இன்றைக்கு காத்தாலே தேநீர் குடித்தேன்
(E) விடை தெரியவில்லை

24. நிறுத்தற் குறிகளை அறிதல் (எது சரியானது)

ஓ என்னை அறியாமல் தூங்கிவிட்டேனோ

(A) ஓ! என்னை அறியாமல் தூங்கிவிட்டேனோ?

(B) ஓ என்னை அறியாமல் தூங்கி விட்டேனோ.

(C) ஓ, என்னை அறியாமல் தூங்கி விட்டேனோ.

(D) ஓ என்னை அறியாமல் தூங்கி, விட்டேனோ?

(E) விடை தெரியவில்லை

25. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

மயிலாப்பூர்

(A) மயிலை

(B) மன்னை

(C) மதுரை

(D) ஆம்பூர்

(E) விடை தெரியவில்லை

26. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

தஞ்சாவூர்

(A) நஞ்சை

(B) புஞ்சை

(C) தஞ்சை

(D) புதுகை

(E) விடை தெரியவில்லை

27. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுத்தெழுதுக.

ஒஞ்சி

(A) ஒன்பது

(B) ஒன்று

(C) நூறு

(D) ஓராயிரம்

(E) விடை தெரியவில்லை

28. “உனக்கு பாடத்தெரியுமா?” என்ற வினாவிற்கு எனக்கு “ஆடத்தெரியும்” என்று கூறுவது

(A) உறுவது கூறல் விடை

(B) இனமொழி விடை

(C) உற்றது உரைத்தல் விடை

(D) வினா எதிர் வினாதல் விடை

(E) விடை தெரியவில்லை

29. கலைச்சொல்லின் பொருளையறிந்து பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | Disease | 1. | மரபணு |
| (b) | Side effect | 2. | ஒவ்வாமை |
| (c) | Gene | 3. | பக்கவிளைவு |
| (d) | Allergy | 4. | நோய் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

30. சரியான கலைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க

Leadership

(A) தலைமகன்

(B) தனித்துவம்

(C) தலைமைப்பண்பு

(D) தலைமைப் பொறுப்பு

(E) விடை தெரியவில்லை

31. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக. செயப்பாட்டு வினைத் தொடரைக் கண்டறிக.

(A) பத்திரம் பதிவு செய்யப்பட்டது
(B) பத்திரம் பதிவு செய்தான்
(C) பத்திரம் பதிவு செய்தாள்
(D) பத்திரம் பதிவு செய்யவில்லை
(E) விடை தெரியவில்லை

32. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

தன்வினைத் தொடரைக் கண்டறிக

(A) பதவியை விட்டு விலக்கப்பட்டான்
(B) பதவியை விட்டு நீக்கப்பட்டான்
(C) பதவியை விட்டு நீக்கினான்
(D) பதவியை விட்டு நீங்கினான்
(E) விடை தெரியவில்லை

33. விடைக்கேற்ற வினா அமைக்க

அரசுக்குத் தவறாமல் வரி செலுத்த வேண்டும்.

(A) அரசுக்கு யார் வரி செலுத்த வேண்டும்?
(B) தவறாமல் வரி செலுத்த வேண்டுமா?
(C) அரசுக்குத் தவறாமல் என்ன செலுத்தவேண்டும்?
(D) அரசுக்கு யாரெல்லாம் வரி செலுத்த வேண்டும்?
(E) விடை தெரியவில்லை

34. 'உனக்குக் கதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்குக் 'கவிதை எழுதத் தெரியும்' என்று கூறுவது

(A) உறுவது கூறல் விடை
(B) இனமொழி விடை
(C) சுட்டு விடை
(D) நேர் விடை
(E) விடை தெரியவில்லை

35. சொற்கள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தொடரைக் கண்டறிக.

(A) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று

(B) குளத்தில் பூக்கும் மல்லிகை மலர் அன்று

(C) பூக்கும் மலர் குளத்தில் மல்லிகை அன்று

(D) மல்லிகை மலர் பூக்கும் குளத்தில் அன்று

(E) விடை தெரியவில்லை

36. சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) போராடிக் கொண்டே மனிதன் இருக்கிறான் இயற்கையோடு

(B) இயற்கையோடு இருக்கிறான் போராடிக் கொண்டே மனிதன்

(C) மனிதன் இயற்கையோடு போராடிக்கொண்டே இருக்கிறான்

(D) போராடிக் இருக்கிறான் மனிதன் இயற்கையோடு கொண்டே

(E) விடை தெரியவில்லை

37. சரியான தொடர் எது? கண்டறிந்து எழுதுக.

(A) இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்

(B) பரிசு பெற்றாள் பாடியதால் இனிமையாகப் இலக்கியா

(C) இலக்கியா பாடியதால் பரிசு பெற்றாள் இனிமையாகப்

(D) பாடியதால் இலக்கியா பரிசு பெற்றாள் இனிமையாகப்

(E) விடை தெரியவில்லை

38. அகர வரிசைப்படுத்துக.

(A) ஒழுக்கம், உயிர், ஏது, எளிமை

(B) உயிர், எளிமை, ஏது, ஒழுக்கம்

(C) எளிமை, ஏது, உயிர், ஒழுக்கம்

(D) ஏது, ஒழுக்கம், எளிமை, உயிர்

(E) விடை தெரியவில்லை

39. வேர்ச்சொல்லுக்குரிய வினையாலணையும் பெயர் காண்க :

'தா'

(A) தந்தவன்
(B) தந்தான்
(C) தருதல்
(D) தந்து
(E) விடை தெரியவில்லை

40. பண் – என்னும் சொல்லுக்கு இணையற்ற சொல் எது ?

(A) இசை
(B) பாடல்
(C) ஓசை
(D) பணி
(E) விடை தெரியவில்லை

41. பொருளைப் புரிந்து கொண்டு தொடரை நிறைவு செய்க.

நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ———————— யாவும் அரசுக்கே சொந்தம்.

(A) புதைத்தல்
(B) புதையல்
(C) மன்றல்
(D) புத்தகம்
(E) விடை தெரியவில்லை

42. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பூ ———————— வீசும்.

(A) மணம்
(B) மனம்
(C) மன்னம்
(D) மனனம்
(E) விடை தெரியவில்லை

43. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல் அறிக.

(A) வனப்பாதுகாவலர் – Wild Animals
(B) வனவிலங்குகள் – Jungle
(C) காடு – Island
(D) வனவியல் – Forestry
(E) விடை தெரியவில்லை

44. சரியான மரபு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

ஆந்தை ——————

(A) அலறும்
(B) கூவும்
(C) அகவும்
(D) பேசும்
(E) விடை தெரியவில்லை

45. பொருந்தாதச் சொல்லைக் கண்டறிக.

(A) கிணறு – கேணி
(B) சித்தம் – உள்ளம்
(C) ஆழி – கடல்
(D) ஊழி – உலகம்
(E) விடை தெரியவில்லை

46. பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடு.

உரிச்சொல் அல்லாதது

(A) சில
(B) தட
(C) தவ
(D) சால
(E) விடை தெரியவில்லை

47. இடம்வகை அறிந்து பொருந்தாச் சொல்லை எழுதுக.

(A) யான்
(B) அவர்
(C) யாம்
(D) யாங்கள்
(E) விடை தெரியவில்லை

48. "அருகுற" என்னும் சொல்லின் எதிர்ச்சொல் தருக.

(A) அருகில்
(B) தொலைவில்
(C) அண்மையில்
(D) தொன்மையில்
(E) விடை தெரியவில்லை

49. ஒரு பொருள் தரும் பல சொற்கள் எழுதுக.

இதழ்

(A) நாளிதழ் – உதடு

(B) பொருப்பு – உயரம்

(C) வனப்பு – பொருப்பு

(D) வெற்பு – மனை

(E) விடை தெரியவில்லை

50. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

குளிர்ச்சி, சாந்தம், மென்மை ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) தண்மை

(B) தண்ணம்

(C) தன்மை

(D) தணிப்பு

(E) விடை தெரியவில்லை

51. சரியான இணைப்புச் சொல்

எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்! ______________ தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக! — சரியான இணைப்புச் சொல் கண்டறிக.

(A) எனவே

(B) ஆகையால்

(C) அதுபோல

(D) அதனால்

(E) விடை தெரியவில்லை

52. குறில் – நெடில் மாற்றம் – பொருள் வேறுபாடு அறிக.

பொலி – போலி

(A) தீமை – நன்மை
(B) சாயல் – அழகு
(C) அழகு – சாயல்
(D) நன்மை – தீமை
(E) விடை தெரியவில்லை

53. குறில் – நெடில் மாற்றம் – பொருள் வேறுபாடு அறிக.

பெரு – பேரு

(A) பெரிய – பெயர்
(B) சிறிய – பெயர்
(C) வட்ட – பெயர்
(D) அகல – பெயர்
(E) விடை தெரியவில்லை

54. சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக

(A) பழம்
(B) பழங்கள்
(C) பழக்குலை
(D) பழக்குவியல்
(E) விடை தெரியவில்லை

55. சொல்லின் கூட்டுப்பெயரைக் கண்டுபிடித்து எழுதுக

(A) ஆட்டுக்கூட்டம்
(B) ஆட்டு மந்தை
(C) ஆட்டு பட்டி
(D) ஆட்டு கொட்டகை
(E) விடை தெரியவில்லை

56. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றார்கள்

(B) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றான்

(C) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்றன

(D) அன்னம்மய்யாவையும் புது ஆளையும் அவர்கள் வரவேற்கின்றன

(E) விடை தெரியவில்லை

57. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்றான்

(B) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்

(C) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்பார்

(D) தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறது

(E) விடை தெரியவில்லை

58. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) கலிங்க வீரர் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினார்கள்

(B) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர்

(C) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினான்

(D) கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடியது

(E) விடை தெரியவில்லை

59. சொல் பொருள் பொருத்துக.

(a) வித்து 1. பெற

(b) களை 2. விதை

(c) ஈன 3. நிலம்

(d) நிலன் 4. வேண்டாத செடி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

60. ஒரு–ஓர் சரியாக அமைந்தத் தொடரை தேர்ந்தெடுக்க.

(A) ஓர் காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு புலியாகும்

(B) ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு புலியாகும்

(C) ஓர் காட்டின் வளத்தால் குறிக்கும் குறியீடு புலியாகும்

(D) ஒரு காட்டின் வளத்தால் குறிக்கும் குறியீடு புலியாகும்

(E) விடை தெரியவில்லை

61. பிழைதிருத்துதல் : கீழ்க்காணும் தொடர்களில் ஒரு-ஓர் சரியாக அமைந்த தொடர் எது?

(A) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(B) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(C) ஓர் இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(D) ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(E) விடை தெரியவில்லை

62. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

'யாண்டு' என்ற சொல்லின் பொருள்

(A) எனது
(B) எது
(C) எங்கு
(D) எவ்வளவு
(E) விடை தெரியவில்லை

63. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

உரு என்ற சொல்லின் பொருள் ____________.

(A) பகல்
(B) காற்று
(C) அழகு
(D) கப்பல்
(E) விடை தெரியவில்லை

64. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

'கிளை' என்ற பொருளைக் கொண்ட சொல் ____________.

(A) புழை
(B) கொம்பு
(C) கான்
(D) அசும்பு
(E) விடை தெரியவில்லை

65. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) செவ்விலக்கியம் – Classical literature
(B) காப்பிய இலக்கியம் – Epic literature
(C) பக்தி இலக்கியம் – Devotional literature
(D) நவீன இலக்கியம் – Folk literature
(E) விடை தெரியவில்லை

66. குறில் நெடில் மாற்றம் — பொருள் வேறுபாடு அறிக.

வெல்லம் – வெள்ளம்

(A) தண்ணீர் – இனிப்பு

(B) உணவுப் பொருள் – மழை

(C) இனிப்பு – ஓடும் நீர்

(D) கசப்பு – பேராறு

(E) விடை தெரியவில்லை

67. ஒரு பொருள் தரும் இரு சொற்களைத் தேர்ந்தெடுக்க.

'மாலை'

(A) பூ மாலை, மாலைப்பொழுது

(B) நேரம், அணி

(C) மாதம், நிலவு

(D) அணி, ஆடை

(E) விடை தெரியவில்லை

68. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.

(வாடைக்காற்று)

(A) கிழக்கிலிருந்து வீசும் காற்று ————

(B) மேற்கிலிருந்து வீசும் காற்று ————

(C) வடக்கிலிருந்து வீசும் காற்று ————

(D) தெற்கிலிருந்து வீசும் காற்று ————

(E) விடை தெரியவில்லை

69. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.

உன் வீடு __________ அமைந்துள்ளது?

(A) எவ்விடம்

(B) ஏன்

(C) எங்கே

(D) யாது

(E) விடை தெரியவில்லை

70. நாயன்மார்கள் __________ பேர்?

(A) என்ன

(B) ஏன்

(C) எத்தனை

(D) எப்படி

(E) விடை தெரியவில்லை

71. பொருத்தமான காலத்தை தேர்ந்தெடு

முருகன் வந்தான்

(A) இறந்த காலம்

(B) நிகழ் காலம்

(C) எதிர் காலம்

(D) எதுவுமில்லை

(E) விடை தெரியவில்லை

72. எழுத்து வழக்குத் தொடரைக் கண்டறிக.

(A) வாங்க சாமி, வாங்க.

(B) வாருங்கள் சுவாமி! வாருங்கள்.

(C) வாருங்க சாமி, வாருங்க,

(D) வாங்கள் சாமி! வாருங்கள்.

(E) விடை தெரியவில்லை

73. சரியான பேச்சு வழக்கு தொடரைக் காண்க.

(A) இதோ எழுப்புகிறேன்

(B) இதா எழுப்பறேன்

(C) இதோ எழுப்புகின்றேன்

(D) இதோ எழுப்புகின்றான்

(E) விடை தெரியவில்லை

74. சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

யாழினி நிலாவிடம் நாளை சென்னைக்கும் போகலாம் என்று கூறினாள்.

(A) யாழினி நிலாவிடம், நாளை சென்னைக்கு போகலாம் என்று கூறினாள்.

(B) "யாழினி நிலாவிடம், நாளை சென்னைக்கு போகலாம்" என்று கூறினாள்.

(C) யாழினி நிலாவிடம், "நாளை சென்னைக்கு போகலாம்" என்று கூறினாள்.

(D) யாழினி நிலாவிடம், 'நாளை சென்னைக்கு' போகலாம் என்று கூறினாள்.

(E) விடை தெரியவில்லை

75. சரியான நிறுத்தற்குறிகள் இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி, வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கன.

(A) சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கன.

(B) சேரர்களின், பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கன.

(C) "சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன் மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கன.

(D) சேரர்களின் பட்டப் பெயர்களில், கொல்லி, வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கன.

(E) விடை தெரியவில்லை

76. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

எரடு

(A) இரண்டு

(B) எட்டு

(C) எட்டாயிரம்

(D) நான்கு

(E) விடை தெரியவில்லை

77. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல் கண்டறிக.

(A) Volunteer – தன்னார்வலர்

(B) Social Reformer – சமூகப் போராளி

(C) Sentence – பதிவிறக்கம்

(D) Missile – கடல் மைல்

(E) விடை தெரியவில்லை

78. "நீ படிக்கவில்லையா?" என்ற வினாவிற்கு "நான் எழுதுவேன்" என்று கூறுவது எவ்வகை விடை?

(A) நேர் விடை

(B) மறை விடை

(C) இனமொழி விடை

(D) சுட்டு விடை

(E) விடை தெரியவில்லை

79. "நீ படித்தாயா" என்று வினவியபோது "நீயே படி" என்று கூறுவது

(A) நேர் விடை

(B) ஏவல் விடை

(C) சுட்டு விடை

(D) உறுவது கூறல் விடை

(E) விடை தெரியவில்லை

80. உவமைகளால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால்"

என்னும் திருக்குறள் கூறும் உவமைப் பொருள்

(A) குன்றில் ஏறி யானைப் பார்ப்பது
(B) தன்கையில் பொருளை வைத்திருத்தல்
(C) குன்றில் ஏறி யானைப் போரைக் காண்பது
(D) தன்கையில் பொருள் கொண்டு ஒரு செயலைச் செய்வது
(E) விடை தெரியவில்லை

81. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்

நடுஊருள் நச்சு மரம்பழுத் தற்று – திருக்குறள்

உவமை கூறும் பொருளைக் காண்க

(A) ஊரின் நடுவில் மரம் பழுத்து காணப்படுவது
(B) ஊரில் நடுவில் செல்வம் நிறைந்து காணப்படுவது
(C) ஊரில் நடுவில் நச்சு மரங்கள் நிறைந்து காணப்படுவது
(D) ஊரில் நடுவில் நச்சுமரம் பழுத்துக் காணப்படுவது
(E) விடை தெரியவில்லை

82. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல'

- உவமை கூறும் பொருளைக் கண்டறிக.

(A) எடுத்துக் கொள்ளுதல்
(B) வருத்திக் கொள்ளுதல்
(C) பொறுத்துக் கொள்ளுதல்
(D) ஏற்றுக் கொள்ளுதல்
(E) விடை தெரியவில்லை

83. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

கவிதா பாடம் படித்தாள்.

(A) பிறவினை
(B) செயப்பாட்டுவினை
(C) தன்வினை
(D) செய்வினை
(E) விடை தெரியவில்லை

84. விடைக்கேற்ற வினா அமைக்க

ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்

(A) யாரை உயர்திணை என்பர்?

(B) எது உயர்திணை எனப்படும்?

(C) உயர்திணையின் மறு பெயர் என்ன?

(D) உயர்திணையின் வகைகள் யாவை?

(E) விடை தெரியவில்லை

85. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல்.

அகர வரிசை காண்க.

(A) அரிது, ஈதல், அந்நியர், இரவலர்

(B) அரிது, அந்நியர், ஈதல், இரவலர்

(C) அந்நியர், அரிது, இரவலர், ஈதல்

(D) அந்நியர், இரவலர், அரிது, ஈதல்

(E) விடை தெரியவில்லை

86. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்

பணிந்து – பணித்து

(A) சோர்ந்து – பணிவு

(B) அடங்கி – கட்டளை

(C) எதிர்த்து – கூறுதல்

(D) பயந்து – செய்தான்

(E) விடை தெரியவில்லை

87. அகர வரிசையில் எழுதுக.

(A) பூனை, தையல், தேனீ, மான் (B) தையல், தேனீ, மான், பூனை

(C) மான், தையல், பூனை, தேனீ (D) தேனீ, தையல், பூனை, மான்

(E) விடை தெரியவில்லை

88. கீழ்க்காணும் பெயர்ச் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

(A) பழம், ஆசிரியர், மனிதன், மாணவன்

(B) ஆசிரியர், பழம், மாணவர், மனிதன்

(C) மாணவர், பழம், மனிதன், ஆசிரியர்

(D) ஆசிரியர், பழம், மனிதன், மாணவன்

(E) விடை தெரியவில்லை

89. நட – வேர்ச்சொல்லை வினைமுற்றாக தேர்ந்தெடு

(A) நடத்தல் (B) நடந்தான்

(C) நடப்பவை (D) நடப்பு

(E) விடை தெரியவில்லை

90. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க – "பொறு"

(A) பொறுத்த (B) பொறுத்தல்

(C) பொறுத்தார் (D) பொறுத்து

(E) விடை தெரியவில்லை

91. வேர்ச்சொல்லின் தொழிற்பெயர் காண்க :

'கொடு'

(A) கொடுத்தான் (B) கொடுத்தல்

(C) கொடுத்தவன் (D) கொடுத்து

(E) விடை தெரியவில்லை

92. சாந்தம் என்பதன் எதிர்ச்சொல் எது?

(A) அமைதி
(B) அன்பு
(C) கோபம்
(D) கருணை
(E) விடை தெரியவில்லை

93. 'பீடு' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் தருக.

(A) சிறப்பு
(B) செறிந்து
(C) இழிவு
(D) இன்பம்
(E) விடை தெரியவில்லை

94. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ————————

(A) மூச்சு + அடக்கி
(B) மூச் + அடக்கி
(C) மூச் + சடக்கி
(D) மூச்சை + அடக்கி
(E) விடை தெரியவில்லை

95. 'செம்பயிர்' பிரித்தெழுதுக.

(A) செம்மை + பயிர்
(B) செம் + பயிர்
(C) செமை + பயிர்
(D) செம்பு + பயிர்
(E) விடை தெரியவில்லை

96. சொல்லை பிரித்தெழுதுக.

பிரித்தெழுதுக

(A) பிரி + எழுதுக
(B) பிரித்து + எழுதுக
(C) பிரித் + தெழுதுக
(D) பிரித்தெழு + துக
(E) விடை தெரியவில்லை

97. ஆங்கில சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

(Crafts)

(A) கைவினைப் பொருள்கள்
(B) செயற்கைப் பொருள்கள்
(C) இயற்கைப் பொருள்கள்
(D) வெளிநாட்டுப் பொருள்கள்
(E) விடை தெரியவில்லை

98. கலைச் சொல்லை அறிக :

(WhatsApp)

(A) செயலி
(B) இணையம்
(C) முகநூல்
(D) புலனம்
(E) விடை தெரியவில்லை

99. சந்திப் பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்
(B) பாலை குடித்துவிட்டு பள்ளிக்குப் புறப்பட்டாள்
(C) பாலை குடித்துவிட்டு பள்ளிக்கு புறப்பட்டாள்
(D) பாலைக் குடித்துவிட்டு பள்ளிக்கு புறப்பட்டாள்
(E) விடை தெரியவில்லை

100. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

(A) மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது
(B) மரத்தில் குயில் அலறிக் கொண்டிருந்தது
(C) மரத்தில் குயில் கூவிக் கொண்டிருந்தது
(D) மரத்தில் குயில் கத்திக் கொண்டிருந்தது
(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ - பொது அறிவு-(பத்தாம் வகுப்புத்தரம்)

## Part-B - General Studies-(SSLC Standard)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

---

101. Choose the correct sentences.

(i) Rajasthan is the largest producer of Bajra in India.

(ii) West Bengal is the leading state both in cultivation and production of Jute.

(iii) Andhra Pradesh is India's largest oilseeds producing state.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

சரியான வாக்கியங்களைத் தேர்ந்தெடு.

(i) இந்தியாவில் கம்பு உற்பத்தியில் இராஜஸ்தான் முதன்மை மாநிலமாக உள்ளது.

(ii) சணல் பயிரிடுவதிலும், உற்பத்தியிலும் மேற்கு வங்காளம் முதலிடம் வகிக்கிறது.

(iii) இந்தியாவில் ஆந்திரப் பிரதேசம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

102. Which of the following is incorrectly paired?

| | Name of projects | | River |
|---|---|---|---|
| (1) | Chambal Valley Project | – | Chambal |
| (2) | Nagarjuna Sagar Project | – | Kosi |
| (3) | Sardar Sarovar project | – | Narmada |
| (4) | Indira Gandhi Canal Project | – | Mahanadi |

(A) (1) and (2)

(B) (2) and (3)

(C) (3) and (4)

(D) (2) and (4)

(E) Answer not known

கீழ்க்காணும் பொருத்தத்தில் எவை தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

| | பல்நோக்கு திட்டத்தின் பெயர் | | ஆறுகள் |
|---|---|---|---|
| (1) | சம்பல் பள்ளத்தாக்குத் திட்டம் | – | சம்பல் |
| (2) | நாகார்ஜுன சாகர் திட்டம் | – | கோசி |
| (3) | சர்தார் சரோவர் திட்டம் | – | நர்மதை |
| (4) | இந்திரா காந்தி கால்வாய்த் திட்டம் | – | மகாநதி |

(A) (1) மற்றும் (2)

(B) (2) மற்றும் (3)

(C) (3) மற்றும் (4)

(D) (2) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

103. Match the following :

| | I | | II |
|---|---|---|---|
| (a) | Bulb | 1. | Turmeric |
| (b) | Corm | 2. | Potato |
| (c) | Rhizome | 3. | Onion |
| (d) | Tuber | 4. | Colacasia |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

சரியாக பொருத்துக :

| | I | | II |
|---|---|---|---|
| (a) | குமிழ்த்தண்டு | 1. | மஞ்சள் |
| (b) | தரையடிக் கிழங்கு | 2. | உருளைக்கிழங்கு |
| (c) | மட்டநிலத் தண்டு | 3. | வெங்காயம் |
| (d) | கிழங்கு | 4. | சேப்பங்கிழங்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

104. Identify the correctly matched pairs :

| | I | | II |
|---|---|---|---|
| (1) | Bacteria | – | Prokaryote |
| (2) | Protista | – | Mushroom |
| (3) | Plantae | – | Angiosperm |
| (4) | Animalia | – | Mycoplasma |

(A) (1) and (3)

(B) (1) and (2)

(C) (2) and (3)

(D) (3) and (4)

(E) Answer not known

கீழ்க்காணும் இணைகளில் சரியான இணையைத் தேர்ந்தெடு :

| | I | | II |
|---|---|---|---|
| (1) | பாக்டீரியா | – | தொன்மையுட்கரு உயிரி |
| (2) | புரோட்டிஸ்டா | – | காளான் |
| (3) | பிளாண்டே | – | ஆஞ்சியோஸ்பெர்ம் |
| (4) | அனிமேலியா | – | மைக்கோபிளாஸ்மா |

(A) (1) மற்றும் (3)

(B) (1) மற்றும் (2)

(C) (2) மற்றும் (3)

(D) (3) மற்றும் (4)

(E) விடை தெரியவில்லை

105. Which is called the "Life Saving" hormone?

(A) Thymosin
(B) Triiodothyronine
(C) Cortisol
(D) Tetraiodothyronine
(E) Answer not known

உயிர் காக்கும் ஹார்மோன் என அழைக்கப்படுவது எது?

(A) தைமோசின்
(B) ட்ரைஅயோடோதைரோனைன்
(C) கார்டிசோல்
(D) டெட்ராஅயோடோதைரோனைன்
(E) விடை தெரியவில்லை

106. Calculate the equivalent resistance between A and B in the given circuit




(A) $8\ \Omega$
(B) $24\ \Omega$
(C) $6\ \Omega$
(D) $12\ \Omega$
(E) Answer not known

கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள A மற்றும் B புள்ளிகளுக்கிடையேயான தொகுபயன் மின்தடையைக் காண்க.




(A) $8\ \Omega$
(B) $24\ \Omega$
(C) $6\ \Omega$
(D) $12\ \Omega$
(E) விடை தெரியவில்லை

107. Match the following :

| | State | | Dance |
|---|---|---|---|
| (a) | Assam | 1. | Kathakali |
| (b) | Karnataka | 2. | Kuchipudi |
| (c) | Andhra Pradesh | 3. | Sattriya |
| (d) | Kerala | 4. | Yakshagana |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) Answer not known

பொருத்துக :

| | மாநிலம் | | நடனம் |
|---|---|---|---|
| (a) | அசாம் | 1. | கதகளி |
| (b) | கர்நாடகா | 2. | குச்சிப்புடி |
| (c) | ஆந்திர பிரதேசம் | 3. | சத்ரியா |
| (d) | கேரளா | 4. | யக்ஷகானம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

108. Find out the correct statement in Maratha Sivaji Rule.

(A) Afzalkhan was appointed the Governor of the Deccan in 1660 with the main purpose of crushing Sivaji.

(B) Senji acted as the first line of defence for Shivajis successors.

(C) The revenue administration of Shivaji was humane and beneficient to the cultivators.

(D) Sardeshmukhi was an additional 15% of the revenue which Shivaji collected.

(E) Answer not known

மராத்திய சிவாஜி காலத்தில் நடந்த சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

(A) சிவாஜியை அடக்கும் முக்கிய நோக்கில் 1660 ஆம் ஆண்டு அப்சல்கான் தக்காணத்தின் ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட்டார்

(B) சிவாஜியின் வழித்தோன்றல்களை பாதுகாப்பதில் செஞ்சி முன்னணியில் செயல்பட்டது

(C) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், நியாயமானதாக உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது

(D) சர்தேஷ்முகி என்பது சிவாஜி வசூலித்த 15 சதவிகித கூடுதல் வருவாயாகும்

(E) விடை தெரியவில்லை

109. The Indus civilisation and the contemporary cultures covered nearly how many million sq.km area in India and Pakistan?

(A) 1.4 million sq.km (B) 1.5 million sq.km

(C) 1.3 million sq.km (D) 1.2 million sq.km

(E) Answer not known

சிந்து நாகரிகமும் அதன் சமகாலப் பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக மொத்தம் எத்தனை மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன?

(A) 1.4 மில்லியன் சதுர கிலோமீட்டர் (B) 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர்

(C) 1.3 மில்லியன் சதுர கிலோமீட்டர் (D) 1.2 மில்லியன் சதுர கிலோமீட்டர்

(E) விடை தெரியவில்லை

110. Article 243(B) was inserted in the constitution under which Constitutional Amendment?

(A) 64th Constitutional Amendment

(B) 65th Constitutional Amendment

(C) 74th Constitutional Amendment

(D) 73rd Constitutional Amendment

(E) Answer not known

சட்டப்பிரிவு 243(B) எந்த அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது?

(A) 64வது அரசமைப்புச் சட்டதிருத்தம்

(B) 65வது அரசமைப்புச் சட்டதிருத்தம்

(C) 74வது அரசமைப்புச் சட்டதிருத்தம்

(D) 73வது அரசமைப்புச் சட்டதிருத்தம்

(E) விடை தெரியவில்லை

111. The 73rd and 74th Constitutional Amendments reserved one third of the total number of seats for women in

(A) Panchayat and Urban local bodies

(B) The State Legislative Assembly

(C) The Indian Parliament

(D) Employment for women

(E) Answer not known

73வது மற்றும் 74வது அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் எங்கே பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை ஒதுக்கியுள்ளன?

(A) பஞ்சாயத்து மற்றும் நகர சுய ஆட்சி அமைப்புகளில்

(B) மாநில சட்டமன்றங்களில்

(C) இந்திய நாடாளுமன்றத்தில்

(D) பெண்களுக்கு வேலை வாய்ப்பில்

(E) விடை தெரியவில்லை

112. Match List-I with List-II and select the correct answer :

| List I | List II |
|---|---|
| (a) Governor | 1. Article 167 |
| (b) Council of Ministers | 2. Article 169 |
| (c) Duties of Chief Minister | 3. Article 155 |
| (d) Abolition or creation of legislative councils in states | 4. Article 163 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை பயன்படுத்தி பட்டியல்-I மற்றும் பட்டியல்-II-யுடன் பொருத்தி சரியான இணையைத் தேர்ந்தெடுக்க :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) ஆளுநர் | 1. பிரிவு 167 |
| (b) அமைச்சர்கள் குழு | 2. பிரிவு 169 |
| (c) முதலமைச்சரின் பணிகள் | 3. பிரிவு 155 |
| (d) மாநில சட்டமன்ற மேலவை ஒழித்தல் அல்லது உருவாக்கம் | 4. பிரிவு 163 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

113. Which Article of the Constitution of India declares that the state shall provide free and compulsory education to all children of the age of six to fourteen years?

(A) Article – 21-A

(B) Article – 20

(C) Article – 21

(D) Article – 22

(E) Answer not known

ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்க வேண்டும் என்று இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவு அறிவிக்கிறது?

(A) பிரிவு – 21-A

(B) பிரிவு – 20

(C) பிரிவு – 21

(D) பிரிவு – 22

(E) விடை தெரியவில்லை

114. Which state has the largest number of members in Lok Sabha?

(A) Maharashtra

(B) West Bengal

(C) Uttar Pradesh

(D) Madhya Pradesh

(E) Answer not known

மக்களவையில் மிகுதியான உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம் எது?

(A) மகாராஷ்ட்ரா

(B) மேற்கு வங்கம்

(C) உத்தரப் பிரதேசம்

(D) மத்தியப் பிரதேசம்

(E) விடை தெரியவில்லை

115. Match correctly the exemplary leaders and their roles :

| | | | |
|---|---|---|---|
| (a) | Melanie Perkins | 1. | Tiktoks crusader for women |
| (b) | Drew Afualo | 2. | Centering solutions in the climate fight |
| (c) | Sage Lenier | 3. | An examplary athlete |
| (d) | Matt Fitzpatrick | 4. | Visualising a world of good in technology |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

முன்மாதிரியான தலைவர்களையும் அவர்களின் பங்களிப்பையும் சரியாகப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மெலனி பர்கின்ஸ் | 1. | பெண்களுக்கான Tiktok க்ருஸேடர் |
| (b) | ட்ரூ அஃபுவாலோ | 2. | காலநிலை சண்டையில் தீர்வுகளை மையப்படுத்தல் |
| (c) | சேஜ் லெனியர் | 3. | முன்மாதிரியான விளையாட்டு வீரர் |
| (d) | மாட் ஃபிட்ஸ்பாட்ரிக் | 4. | தொழில் நுட்பத்தில் நல்ல உலகத்தை காட்சிபடுத்துதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

116. In the population survey for the year 1951 is known as ————.

(A) Year of small divide

(B) Year of population explosion

(C) Year of urbanisation

(D) Year of great divide

(E) Answer not known

மக்கள் தொகையில் 1951-ம் ஆண்டு ———— எனப்படுகிறது.

(A) சிறு பிளவு ஆண்டு

(B) மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு

(C) நகரமயமாதல் ஆண்டு

(D) பெரும் பிரிவினை ஆண்டு

(E) விடை தெரியவில்லை

117. Reason and Assertion type :

Assertion [A] : Land reform refers to distribution of land among the landless by taking possession of surplus land from the large land holders.

Reason [R] : Land reform were not successful in Kerala.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false [R] is true

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று மற்றும் காரணம் வகை :

கூற்று [A] : நில சீர்திருத்தம் என்பது நிலக்கிழார்களிடம் இருக்கும் நிலத்தை நிலமற்றவர்களுக்கு மறுபகிர்வு செய்வது ஆகும்.

காரணம் [R] : நில சீர்திருத்தம் கேரளாவில் வெற்றி பெறவில்லை.

(A) கூற்று [A] சரி காரணம் [R] தவறு

(B) கூற்று [A] காரணம் [R] சரி, காரணம் [R] கூற்று [A]க்கான சரியான விளக்கம்

(C) கூற்று [A] தவறு காரணம் [R] சரி

(D) கூற்று [A] காரணம் [R] சரி, ஆனால் காரணம் [R] கூற்று [A]-க்கான சரியான விளக்கம் அல்ல

(E) விடை தெரியவில்லை

118. Choose the right matches among type :

| | Finance Commission period | | Chairman |
|---|---|---|---|
| (1) | 2000 – 2005 | – | C. Rangarajan |
| (2) | 1957 – 1962 | – | K. Santhanam |
| (3) | 2015 – 2020 | – | N.K. Singh |
| (4) | 1995 – 2000 | – | K.C. Pant |

(A) (i) and (ii) correct

(B) (ii) and (iii) correct

(C) (iii) and (iv) correct

(D) (ii) and (iv) correct

(E) Answer not known

சரியான இணையைக் கண்டுபிடி :

| | நிதிக்குழு காலம் | | தலைவர் |
|---|---|---|---|
| (1) | 2000 – 2005 | – | C. ரங்கராஜன் |
| (2) | 1957 – 1962 | – | K. சந்தானம் |
| (3) | 2015 – 2020 | – | N.K. சிங் |
| (4) | 1995 – 2000 | – | K.C. பந்த் |

(A) (i) மற்றும் (ii) சரி

(B) (ii) மற்றும் (iii) சரி

(C) (iii) மற்றும் (iv) சரி

(D) (ii) மற்றும் (iv) சரி

(E) விடை தெரியவில்லை

119. Which of the following statements are true about the Sixth Five Year plan in India?

(i) The basic objective of the plan was poverty eradication

(ii) It was based on Investment Yojana

(iii) It's growth target was 5.2% but achieved 4.7%

(A) (i) only

(B) (ii) and (iii)

(C) (i) and (ii)

(D) (i) and (iii)

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளுள் எவை 6 ஆம் ஐந்தாண்டு திட்டத்தைப் பொறுத்து சரியானவை?

(i) வறுமை ஒழிப்புதான் இதன் முக்கிய நோக்கம்

(ii) இது முதலீட்டு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது

(iii) இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்காக 5.2% நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது ஆனால் 4.7% வளர்ச்சி எட்டப்பட்டது

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii)

(C) (i) மற்றும் (ii)

(D) (i) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

120. He was the first to lose his life by protesting against the forced imposition of Hindi in Tamilnadu ————.

(A) K. Appadurai
(B) Natarasan
(C) Stalin Jegadesan
(D) Palladam Ponnusamy
(E) Answer not known

தமிழ்நாட்டில் கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தி முதலில் உயிர் நீத்தவர் ————.

(A) கே. அப்பாதுரை
(B) நடராசன்
(C) ஸ்டாலின் ஜெகதீசன்
(D) பல்லடம் பொன்னுசாமி
(E) விடை தெரியவில்லை

121. Who gave the protection to Velunachiyar and her daughter for eight years?

(A) Gopal Nayak of Dindigul
(B) Hyder Ali of Mysore
(C) Kattabomman of panchalam Kurichi
(D) Kuyili a faithful friend
(E) Answer not known

வேலுநாச்சியாருக்கும் அவரது மகளுக்கும் எட்டு ஆண்டுகள் பாதுகாப்பு கொடுத்தவர் யார்?

(A) திண்டுக்கல்லின் கோபால் நாயக்கர்
(B) மைசூரின் ஹைதர் அலி
(C) பாஞ்சாலங்குறிச்சியின் கட்டபொம்மன்
(D) குயிலி என்ற நம்பிக்கைக்குரிய தோழி
(E) விடை தெரியவில்லை

122. Choose the right answer among type

Which of the following statement are true about Mahatma Gandhi?

(i) He faced racial discrimination for the 1st time in Pietermaritzburg railway station.

(ii) He launched a struggle against unjust laws in Transvaal.

(iii) He deeply influenced by Ruskin, and established the Phoenix settlement in 1905.

(A) (i) only correct

(B) (ii) only correct

(C) (i) and (iii) only correct

(D) (i), (ii) and (iii) are correct

(E) Answer not known

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

பின்வருவனவற்றுள் காந்தியடிகள் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க

(i) இவர் முதல் முறையாக இனவெறி செயலை பீட்டர்மாரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் எதிர் கொண்டார்.

(ii) இவர் டிரான்ஸ்வாலில் உள்ள நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து போராடினார்.

(iii) இவர் ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டு ஃபீனிக்ஸ் குடியிருப்பை நிறுவினார்.

(A) (i) மட்டும் சரியானவை

(B) (ii) மட்டும் சரியானவை

(C) (i) மற்றும் (iii) மட்டும் சரியானவை

(D) (i), (ii) மற்றும் (iii) சரியானவை

(E) விடை தெரியவில்லை

123. Match correctly the Geographical Indication (GI) Tags of Tamil Nadu with their place and production :

| | | | |
|---|---|---|---|
| (a) | Nagercoil | 1. | Kuthuvilakku |
| (b) | Erode | 2. | Bronze Icons |
| (c) | Swamimalai | 3. | Turmeric |
| (d) | Nachiarkovil | 4. | Temple Jewellery |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known

தமிழ்நாட்டின் புவிசார் குறியீடுகளை அவற்றின் இடம் மற்றும் உற்பத்தியுடன் சரியாகப் பொருத்தவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | நாகர்கோவில் | 1. | குத்து விளக்கு |
| (b) | ஈரோடு | 2. | வெண்கல சிலைகள் |
| (c) | சுவாமிமலை | 3. | மஞ்சள் |
| (d) | நாச்சியார்கோவில் | 4. | கோவில் நகைகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

124. Potsherds inscribed with ———— script have been unearthed in Keeladi.

(A) Tamil – Aayudha script

(B) Tamil – Mei script

(C) Tamil – Uyir mei script

(D) Tamil – Brahmi script

(E) Answer not known

கீழடியில் ———— எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(A) தமிழ் – ஆயுத எழுத்து

(B) தமிழ் – மெய் எழுத்து

(C) தமிழ் – உயிர்மெய் எழுத்து

(D) தமிழ் – பிராமி எழுத்து

(E) விடை தெரியவில்லை

125. "Mangala Malai" – to provide parental assistance to orphan girls to get married was introduced in which year?

(A) 2010 – 2011 (B) 2011 – 2012

(C) 2012 – 2013 (D) 2013 – 2014

(E) Answer not known

"மங்கள மாலை" அனாதை பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய பெற்றோர்க்கு உதவி வழங்கும் திட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) 2010 – 2011 (B) 2011 – 2012

(C) 2012 – 2013 (D) 2013 – 2014

(E) விடை தெரியவில்லை

126. Assertion [A] : Positive social impacts in tourism included.

Reason [R] : Learning about different cultures, increases tolerance.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false and [R] is true

(D) Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : சுற்றுலாவில் நேர்மறையான சமூக தாக்கங்கள் உருவாகும்.

காரணம் [R] : பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றி அறிந்து கொள்வது மற்றும் சகிப்புத் தன்மையை அதிகரிப்பது ஆகியவை அடங்கும்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] ஆனது [A]க்கான சரியான விளக்கம் ஆகும்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] ஆனது [A]க்கான சரியான விளக்கம் அல்ல என்பது சரி

(E) விடை தெரியவில்லை

127. Arrange the following in chronological order.

(1) Madras Mahajana Sabha

(2) Poona Sarvajanik Sabha

(3) Madras Native Association

(4) Bombay Presidency Association

(A) (1), (2), (3), (4)
